# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 19, 2025 | Weekly E-paper ● April 19, 2025




# முதல்வரின் முழக்கம்!

சுப. வீரபாண்டியன்

## சுயமரியாதை நூற்றாண்டு மாநாடு!

எழில்.இளங்கோவன்

## ஓடிவருகிறான் உதயசூரியன்

தலையங்கம்

## தமிழ்நாட்டின் சரவெடிகள்! விழிபிதுங்கும் பா.ஜ.க !

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 19, 2025 Weekly E-paper • April 19, 2025


# முதல்வரின் முழக்கம்!

**சுப. வீரபாண்டியன்**

தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்பட வேண்டிய நிதியைக் கொடுக்காமல், ஒன்றிய அரசு ஓரவஞ்சனை செய்கிறது என்றும், மறு தொகுதிச் சீரமைப்பு என்பது மறைமுகமாகத் தென்னாட்டில் உள்ள மாநிலங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்!

இதற்கு அரசியல் ரீதியாகவும், புள்ளி விவரங்களோடும் விடை தராமல், இந்தியாவின் பிரதமர் மோடி அவர்கள், எவ்வளவு கொடுத்தாலும் அழுகைக் குரல் குறையவே இல்லை என்று தனிப்பட்ட சண்டை போலப் பேசியுள்ளார்! இப்படி விடை சொல்வது, ஒரு பிரதமரின் தகுதிக்கு அழகும் இல்லை, ஏற்றதும் இல்லை!

இப்போது மிகச் சரியாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சர், "இது அழுகை அன்று, உரிமைக் குரல்" என ஓங்கி முழங்கி இருக்கிறார்! அது மட்டுமின்றி, ஒன்றிய அரசு எத்தனை நெருக்கடிகளைக் கொடுத்தாலும், தமிழ்நாடு பணியாது என்றும் துணிவாகத் தன் கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்!

தமிழ்நாட்டின் உரிமைக் குரலாய் ஒலிக்கும் முதலமைச்சரின் குரலை நாம் மகிழ்ந்து, பாராட்டி, வரவேற்கிறோம்! சுயமரியாதை இயக்கம் தோன்றி வளர்ந்த மண், இந்தத் தமிழ் மண் என்பதை முதலமைச்சரின் ஒவ்வொரு பேச்சும் உறுதிப்படுத்துகிறது! இந்த நிலைப்பாடு, மக்களிடையே திமுக விற்கும், தமிழ்நாடு அரசுக்கும் பெரும் வரவேற்பைப் பெற்றுத் தந்துள்ளது!

இதுகுறித்து இன்று தொலைக்காட்சி ஊடகங்கள் சில, விவாதங்கள் நடத்தின. முதலமைச்சரின் உரை பற்றி மக்களிடையே கருத்துக் கணிப்பும் நடத்தின! சன் நியூஸ் போன்ற திமுக ஆதரவு ஊடகங்களைத் தாண்டி, நியூஸ்



7 தொலைக்காட்சியும் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தி வெளியிட்டது!

முதலமைச்சரின் இந்த உரை வெறும் அரசியல் உத்தியா, அதிமுக எதிர்ப்பா என்பது போன்ற நான்கு வினாக்களை முன் வைத்திருந்தது ! அதில் 75 விழுக்காடு பார்வையாளர்கள், இந்தக் குரல் மாநில உரிமைக்காகவே என்று கருத்து தெரிவித்திருந்தனர் !

எனவே கட்சி எல்லையைத் தாண்டி, இது மாநில உரிமைக்கான குரல் என்ற எண்ணம் பொதுமக்கள் இடையேயும் ஏற்பட்டு உள்ளது என்பது தெளிவாகிறது! இந்தக் கருத்து மேலும் மேலும் மக்களிடம் பரவும், திமுகவிற்கான பெரும் ஆதரவைப் பெற்றுத்தரும் என்பது உறுதி!

அதிமுகவை அமித்ஷா பணிய வைத்தது போல, திமுகவை ஒன்றிய அரசினால் ஒரு நாளும் அடிபணிய வைக்க முடியாது என்பதே இன்றைய அரசியல் ! இது திமுகவிற்கான வெற்றி இல்லை, தமிழ்நாட்டு மக்களுக்கான வெற்றி!

●

# சுயமரியாதை நூற்றாண்டு மாநாடு! வாருங்கள் தோழர்களே, வாருங்கள்!

**எழில்.இளங்கோவன்**

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக கோவையில் ஏப்ரல் 26 மற்றும் 27 ஆகிய இரு நாட்களில் "சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநில மாநாடு " சிறப்பாக நடைபெற இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைப் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையின்கீழ், அவைத்தலைவர் பொள்ளாச்சி மா.உமாபதி, பொதுச்செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைப் பொதுச்செயலாளர் காசு. நாகராசன் உள்ளிட்ட தோழர்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.

சுயமரியாதை என்றால் என்ன என்ற ஒரு கேள்வியை எழுப்பும்போது அதற்குத் "தன்மானம்தான் சுயமரியாதை! சமத்துவம் பேணுவது, புதிய உலகைப் படைக்க முயலுவது, பழைய அமைப்பை அறிவாயுதம் கொண்டு பரப்புரை செய்து அழிப்பது என்பதே சுயமரியாதையாகும்! இந்தச் சுய மரியாதை வாழ்வே சுகவாழ்வு தருவது. மானத்தோடு வாழ்வதை தமிழர்களிடையே படைக்க முயன்று தோன்றிய இயக்கம் தான் சுயமரியாதை இயக்கம்!" என்று க.திருநாவுக்கரசு அவர்கள் இவ்வாறு விளக்கம் தருகிறார்




இந்த அடிப்படையில், பகுத்தறிவு பெற்று மூடநம்பிக்கைகளை மறுப்பது, சாதிஒழிப்பது, பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக, ஆண்- பெண் சமத்துவம் பேணி, வளர்ந்துவரும் அறிவியலோடு இணைந்த சமத்தும் பேணும் சமுதாயத்திற்கான வித்துதான், சுயமரியாதையும், அதன் செயல்பாடுகளும் அமையும்.

சுயமரியாதையைச் சொன்னதோடு, அதற்கான களத்தை அமைத்தவர் தந்தை பெரியார் அவர்கள்.சுயமரியாதை இயக்க முதல் மாநில மாநாட்டைச் செங்கல்பட்டில் 1929 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 மற்றும் 18 ஆகிய இரண்டு நாட்களில் நடத்திய ஐயா பெரியார்,

சவுந்திரபாண்டியனார் அவர்களை மாநாட்டின் தலைமையை ஏற்கச் செய்தார். சுயமரியாதை இயக்க இரண்டா வது மாநில மாநாடு ஈரோட்டில் 1930 ஆம் ஆண்டு மே மாதம் 10 முதல் 13 வரை எம். ஆர். ஜெயகர் தலைமையில் நடந்தது.

விருதுநகரில் சுயமரியாதை இயக்க மூன்றாவது மாநில மாநாடு 1931ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆகிய நாட்களில் ஆர். கே. சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

இதற்கடுத்து திருநெல்வேலியில் ஒரு சுயமரியாதை இயக்க மாநாடு நடைபெற்றது. ஆனால் அது மாவட்ட மாநாடு, மாநில மாநாடு அல்ல.

1931 ஆம் ஆண்டு விருதுநகர் மாநில மாநாட்டிற்குப் பிறகு, 2025 ஏப்ரல் 26/27 இல் கோவையில் நடக்க இருக்கும் சுயமரியாதை இயக்க மாநில மாநாடு 'நூற்றாண்டு' மாநாடாக அமைகிறது. இது ஒரு நூற்றாண்டின் திராவிட இயக்க வளர்ச்சியின் என்பதன் அடையாளம்.

என்றாலும் திராவிட இயக்கத்தின் பணி இனியும் தொடர வேண்டிய அவசியம் என்ன என்பதையும், ஆர்.எஸ். எஸ் முகமூடி பா.ஜ.கவின் பாசிச மதவெறி ஆட்சியை எதிர்கொண்டு வீழ்த்த வேண்டியதன் அவசியத்தையும், அதற்காக திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியின் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களின் பின்னால் போர்ப்படை வீரர்களாய் அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும் அரசியல் நெடியோடு பேச இருக்கிறார்கள் தோழர்கள், கவிஞர்கள், தலைவர்கள், தமிழ்நாடு அமைச்சர்கள்.

பெரியாரின் திராவிடம் அரசியலை விட்டு வெளியே இருக்கம், ஆனால் அரசியலின் நெடியோடு என்பதைக் கோவை மாநாட்டில் காணப் போகிறோம்.

அதேசமயம் திராவிட அரசியலில் திராவிட முன்னேற் கழகம் ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதையும் கோவை மாநாட்டில் பார்க்கப் போகிறோம்.

பகுத்தறிவு என்பதற்கு மற்றொரு பெயர் சுயமரியாதை. வாருங்கள் தோழர்களே! கோவை சுயமரியாதை மாநாட்டில், சந்திப்போம்!

# கோவை சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா

## 26-04-2025

**காலை 9.30 மணி**

மாநாட்டுக் கொடி ஏற்றுபவர்: **எழில்.இளங்கோவன்**

மாநாட்டுத் தொடக்க உரை:
**கவிஞர் கனிமொழி கருணாநிதி** எம்.பி,
துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க.

**பகல் 11 மணி: கருஞ்சட்டை அரங்கம்**

தலைமை :
**ஆசிரியர் கி.வீரமணி** தலைவர், திராவிடர் கழகம்

கருத்துரை

**கொளத்தூர் மணி,** தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

**கு.இராமகிருட்டிணன்** பொதுச் செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**ஓவியா** தலைவர், புதிய குரல்

**சுப.வீரபாண்டியன்** தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

மாநாட்டுத் தலைவரை முன்மொழிபவர்
**சிற்பி செல்வராசு,** பேரவைப் பொதுச் செயலாளர்

வரவேற்பு
**வேடசந்தூர் இரவி**
கொள்கை பரப்புச் செயலாளர்

நன்றியுரை:
**அனுப்பட்டி பிரகாஷ்**
மாவட்டச் செயலாளர், திருப்பூர்

**பிற்பகல் 2 மணி: மாணவர் அரங்கம்**

தலைமை: **நெல்லை பாபு**
அமைப்பாளர் திராவிட மாணவர் பேரவை

சிறப்புரை

**இரா.இராஜீவ் காந்தி**
திமுக மாணவரணிச் செயலாளர்

**இராம.வைரமுத்து**
பேரவைத் துணைப் பொதுச்செயலாளர்

**பொள்ளாச்சி சித்திக்**
திமுக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

நன்றியுரை
**மதியரசன்**
திராவிட மாணவர் பேரவை

**மாலை 4.30 - இளைஞர் அரங்கம்**

தலைமை: **சந்தானம்**
பேரவை இளைஞரணிச் செயலாளர்

சிறப்புரை

**நா. எழிலன்**
திமுக மருத்துவர் அணிச்செயலாளர்

**சே.மதிவதனி**
திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர்

**இரா.உமா**
பேரவைத் துணைப் பொதுச் செயலாளர்

நன்றி உரை
**இளமாறன்**
பேரவை இளைஞரணித் துணைச் செயலாளர்

**மாலை 6 மணி அரசியல் அரங்கம்**

தலைமை: **பொள்ளாச்சி மா. உமாபதி**
பேரவைத் துணைத் தலைவர்

வரவேற்பு: **எட்வின்**
பேரவைத் தலைமை நிலையச் செயலாளர்

சிறப்புரை:
**ஆ.இராசா**
துணைப்பொதுச்செயலாளர், திமுக

**தோழர் சுப்பராயன்**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

**பேராசிரியர் அருணன்**
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

**நவாஸ் கனி**
இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணைத் தலைவர்

**மு.செந்திலதிபன்**
பொருளாளர், ம.தி.மு.க

**சி.வி.எம்.பி.எழிரசன்**
கொ.ப.செ, திமுக

**ஆளூர் ஷாநவாஸ்**
துணைப் பொதுச்செயலாளர், வி.சி.க

## 27-04-2025, ஞாயிறு

**காலை 9 மணி: கவியரங்கம்**

வரவேற்புக் கவிதை:
**எழில்.இளங்கோவன்**

தொடக்கக் கவிதை:
**பொன்.செல்வகணபதி**

கவியரங்கத் தலைமை:
**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

கவிஞர் **நெல்லை ஜெயந்தா** | பேராசிரியர் **ஹாஜாகனி** | கவிஞர் **நறுமுகை**

**பகல் 11 மணி : ஊடகவியலாளர் அரங்கம்**

**யூடியூப் புருட்டஸ் மைனர், இந்திரகுமார் தேரடி, மில்டன், கரிகாலன், அதர்மம் மனோஜ்**

**பகல் 12 மணி: சமூகநீதி அரங்கம்**

தலைமை
**செல்வின்,** பேரவைத் துணைத் தலைவர்

வரவேற்புரை
**புலேந்திரன்,** அமைப்புச் செயலாளர்

தொடக்கவுரை
**புலவர் செந்தலை கவுதமன்**, சூலூர் பாவேந்தர் பேரவை

கருத்துரை

**இரா.அதியமான்**
தலைவர், ஆதித்தமிழர் பேரவை

**பசும்பொன் பாண்டியன்**
தலைவர், அ.தி.ம.மு.க

**வழக்குறைஞர் வெண்மணி**
தலைவர், திராவிடர் தமிழர் கட்சி

**புதுவை தீனா**
பெரியார் சிந்தனையாளர் இயக்கம்

நன்றியுரை: **சாரதா தேவி,** பேரவை காஞ்சிமாவட்டச் செயலாளர்

**மாலை 4 மணி: உரிமை முழக்கப் பேரணி**

தொடங்கும் இடம்: பெரியார் - அண்ணா சிலை, காந்திபுரம்

**மு.கண்ணப்பன், பொங்கலூர் நா.பழனிச்சாமி, ஆ.சிங்கராயர், வி.ஜி.கோகுல்**

**மாலை 7 மணி, சிவானந்தா காலனி**
**பொது மாநாடு**

நிறைவுப் பேருரை:
**உதயநிதி ஸ்டாலின்**
மாண்புமிகு துணை முதலமைச்சர்

தலைமை: **சுப.வீரபாண்டியன்**
தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

வரவேற்புரை: **காசு. நாகராசன்,**
பேரவைத் துணைப்பொதுச் செயலாளர்

தீர்மானங்கள் முன்மொழிதல்: **சிற்பி செல்வராசு**

சிறப்புரை: **வி.செந்தில்பாலாஜி**, மாண்புமிகு மின்துறை அமைச்சர்

**பீட்டர் அல்போன்ஸ்,** காங்கிரஸ் கட்சி

**அருள்மொழி**, திராவிடர் கழகம்

நன்றியுரை: **வி.பி.கோவிந்தராசு**, பேரவைச் செயற்குழு உறுப்பினர்.



தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஓடிவருகிறான் உதயசூரியன்

பாஜகவுடன் கூட்டணி இல்லை என்றார். டில்லி சென்றார். அமித்ஷா சென்னை வந்தார். அதிமுக-பாஜக கூட்டணியை அறிவித்தார். பக்கத்தில். பேசாமல் உட்கார்ந்து இருந்தார் திருவாளர் எடப்பாடி.

அப்போது " *2026 தேர்தலில் கூட்டணி ஆட்சிதான் இருக்கும். தமிழ்நாட்டில் இணைந்துதான் ஆட்சியமைக்கப் போகிறோம்.* எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கூட்டணி அமைகிறது..." என்று அமித்ஷா பேசியது நாளிதழ்களில் வந்துள்ளது.

அப்போது அமைதிச் சாமியாராக இருந்த எடப்பாடி இப்போது பதறிப்போய், 'கூட்டணி ஆட்சியென்று அமித்ஷா கூறவில்லை, தேர்தல் கூட்டணி என்றுதான் சொன்னார்' என்று சொல்கிறார்.

ஏனிந்த பதற்றம்? ஏனிந்த குழப்பம்? ஏனிந்த தடுமாற்றம்? பாஜக கூட்டணிக்கு முன்னர் சட்டமன்றத்தில் ஒன்றிய வக்ஃபு திருத்தச் சட்டத்தை எதிர்த்த முதல்வரின் தீர்மானத்தை ஆதரித்தார் எடப்பாடி. ஆனால் கூட்டணிக்குப் பின் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையான மாநில சுயாட்சி குறித்தத் தீர்மானத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு வெளிநடப்பு செய்துவிட்டார் அவர்.

அண்ணா பெயரில் கட்சி வேண்டும், அண்ணா பெயரில் கொடிவேண்டும், அவைகளைக் காட்டி ஓட்டுகேட்க வேண்டும். ஆனால் அண்ணாவின் கொள்கையான மாநில சுயாட்சி, மாநில உரிமையைத் தூக்கி வீசவேண்டும். ஓ! இதுதான் ராஜ விசுவாசமா!

சாராயக் கடைகளையும், மந்திரிகளை நீக்கு என்று உலுத்துப்போன போராட்டங்களை நடத்தும் எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகப் போராட வரமறுக்கிறார்.

ஒருபக்கம் கட்சித் தலைமைப்பதவி பறிபோய்விடக் கூடாது. மறுபக்கம் செங்கோட்டையன் குழிதோண்டுவதாகத் தகவல். இதற்கு நடுவில் 'முதலாளி' அமித்ஷாவின் குடைச்சல் வேறு! என்னதான் செய்வார் எடப்பாடி? தாமரைப்பூவும், இரட்டை இலையும் வாடிக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் தொடர்ந்து உதிக்கப் போகிறது உதயசூரியன் ஆட்சி.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408



மேற்கு மண்டல திராவிடப் பள்ளி மாணவர்கள் சந்திப்பு 13-04-2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் திராவிடப் பள்ளியின் இயக்குநர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பள்ளி ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி மா. உமாபதி ஆகியோர் மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்பினை எடுத்தனர்.

# தமிழ்நாட்டின் சரவெடிகள்! விழிபிதுங்கும் பா.ஜ.க !

**சாரதாதேவி**

சரவெடியாய் வெடிக்கிறது தமிழ்நாடு! ஆளுநரைக் குட்டி, மூலையில் உட்கார வைத்து, அவர் போட அடம்பிடித்த கையெழுத்தைத் தானே போட்டது உச்சநீதிமன்றம். பத்து மசோதாக்கள் உடனடியாகச் சட்டம் ஆக, பல்கலைக்கழகங்களில் தன் ஆட்டத்தை முடித்துக்கொள்ள வைக்கப்பட்டார் ஆளுநர்.

பா.ஜ.க ஆளாத எல்லா மாநிலங்களும் தீர்ப்பை வரவேற்க, ஒன்றிய பா.ஜ.க. அரசோ பதறிப்போய் இருக்கிறது. கையோடு வக்பு வாரியத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகவும், “நீட்” விலக்கு மசோதாவுக்காகவும் வழக்குகளை அறிவித்தது தமிழ் நாடு அரசு. அவர்கள் மூச்சு விடுவதற்குள் அடுத்த வெடிச்சத்தம் கேட்கிறது.

இதோ மாநில உரிமைகளை அரசமைப்புச் சட்டத்தின் படி ஆய்வு செய்து, இப்போதைய சூழலுக்குத் தகுந்தவாறு உரிமைகளை மீட்டெடுக்கப் பரிந்துரைகளைக் கொடுக்க ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் குரியன் ஜோசஃப் தலைமையில் ஒரு குழுவை அறிவித்திருக்கிறார் முதல்வர். தன்மீது பொய் வழக்கு தொடுக்கச் சொன்ன ஆணவக்காரர் ஜெயலலிதாவின் ஆட்சியில், அவர் அச்சுறுத்தலை எதிர்த்த உறுதியாளர் இந்திய ஆட்சியர் பணி (ஓய்வு) திரு. அசோக் வர்தன் அவர்களும், நம் திட்டக்குழுவின் மேனாள் துணைத் தலைவர் திரு. நாகநாதன் அவர்களும் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு அடுத்த ஜனவரி மாதத்துக்குள் இடைக்கால அறிக்கை அளிக்கும். இரண்டு ஆண்டுக்குள் இறுதி அறிக்கை அளிக்கும் என அறிவித்துள்ளார் முதல்வர்.



கல்வியை மாநில உரிமையில் இருந்து பறித்ததால் இன்று புதிய கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கை, இந்தித் திணிப்பு, புதிய புதிய நுழைவுத் தேர்வுகள், வரலாற்றுத் திரிபுகள், அறிவியலுக்குப் புறம்பான, உண்மைக்குப் புறம்பான பாடத்திட்டங்கள் மாணவர்கள் மீது திணிக்கப் படுகிறது. நிதி உரிமைகளைப் பறித்துச் சரக்கு மற்றும் சேவை வரி கொணர்ந்ததால், உற்பத்தி மற்றும் சிறு வணிகர்கள் பாதிக்கப்பட்டு, நம்பங்கைக் கேட்டு வாங்குவதே பெரும்பாடாகி இருக்கிறது. மருத்துவத்திலும் மூக்கை நுழைத்து, “நீட்” தேர்வால் நம் மருத்துவக் கல்லூரிகளின் இடங்களைப் பறிப்பது, உயர் படிப்புக்கு நுழைவுத் தேர்வு என நம்மருத்துவக் கட்டமைப்பு சீர்குலைந்து போயுள்ளது. இன்னும் கூட்டுறவுத் துறை, வனங்கள் என எல்லா பொருண்மைகளின் மீதும் தன் ஆக்டோபஸ் கரங்களை வீசி வளைக்கப் பார்க்கிறது பாசிச பா.ஜ.க. அரசு. நம் உரிமைகளை, தீவிரமாக முறியடிக்கும் உத்திகளைக் கொண்டும், பெரும் பாதுகாப்பு வளையங்களை ஏற்படுத்தியும்தான் பாதுகாக்க வேண்டி உள்ளது. முதலமைச்சர் தாய்மை உணர்வுடன் காலத்தே எடுக்க வேண்டிய சரியான நடவடிக்கையாக இந்த முன்னெடுப்பைச் செய்துள்ளார். தன் குழந்தை உண்ணும் உணவை, கற்கும் கல்வியை, கடந்து செல்லும் பாதையினை, டெல்லியில் இருந்து யாரோ ஒருவர் தீர்மானித்தால் கருணையே உருவான தாய்மையும் பொங்கி எழத்தானே செய்யும்?

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் குழுவின் அறிக்கை, நம்மாநில சிக்கல்கள் மட்டுமல்லாது, குஜராத் முதல் வடகிழக்கு மாநிலங்கள் வரை, காஷ்மீர் முதல் கேரளம் வரை அனைத்து மாநிலங்களுக்கான ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகள் உரிமைகள் குறித்த சிக்கல்களுக்குமான தீர்வை முன்வைக்கும் முயற்சியாக இருக்கும். இந்தச் சிறப்பு மிக்க தீர்மானத்தைப் புறக்கணித்து வெளியேறிய புதுக்கூட்டணி ஜோரில் இருக்கும் அ.தி.மு.க இருந்து விவாதத்தில் பங்கு பெறவில்லையே என வருந்தி இருக்கிறார் முதல்வர். எவ்வளவு கொள்கை முரண்கள் இருந்தாலும், எம்.ஜி.ஆரோ, ஜெயலலிதாவோ மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்ததில்லை எனவும், அவர்கள் விட்டுச் சென்ற அந்தக் கட்சியை எடப்பாடி இப்படிக் கையாள்வதை பெரும் மனத்தாங்கலுடன் குறிப்பிட்டு பேசியுள்ளார் முதல்வர்.

1974இல் இராஜ மன்னார் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார் கலைஞர். இந்தியா முழுக்க ஒரு சுற்றுவந்த மாநில சுயாட்சி பொருண்மை, இப்போது மீண்டும் பேருரு எடுத்துள்ளது. அன்று உள்நாட்டில் ஆபத்து இருப்பதாக எமர்ஜென்சியைக் கொண்டு வந்தார் இந்திராகாந்தி. கலைஞர் அரசு காட்டிய உறுதியான எதிர்ப்பால், ஆட்சியைக் கலைத்தார் இந்திரா. இன்று பா.ஜ.க. விழி பிதுங்கி நிற்கிறது.

ஒரு சங்கி சொல்கிறார், “அகில இந்திய அளவில், பா.ஜ.க. அரசுக்கு தலைவலி கொடுக்கக் கூடிய ஆட்சியாக தி.மு.க ஆட்சி இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பாம்ப்ஷெல் (bombshell) போட்டுக் கொண்டே இருக்கிறார்கள்!"

ஆம்! நாமும் சொல்வோம்,

*"Yes! Stalin is more Dangeres then Kalaignar"*

தலைவலி தொடரட்டும். சரவெடிகள் வெடிக்கட்டும்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian